# பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில்
# உலக தாய்ப்பால் வார விழிப்புணர்வு நிகழ்ச்சி

தனலட்சுமி சீனிவாசன் பலகலைக்கழகத்தின் தனலட்சுமி சீனிவாசன் இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சயின்சஸ் அண்ட் ஹாஸ்பிட்டல் நடத்திய உலக தாய்ப்பால் வார விழா நிகழ்ச்சி 07-08-2023 திங்கள்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தனலட்சுமி சீனிவாசன் கல்வி குழுமத்தின் அறக்கட்டளை உறுப்பினர் திரு.ராஜபூபதி அவர்கள் தலைமை வகித்தார். தனலட்சுமி சீனிவாசன் இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சயின்சஸ் அண்ட் ஹாஸ்பிட்டல் டீன் டாக்டர் விஸ்வநாதன் மற்றும் மெடிக்கல் சூப்பிரண்டு டாக்டர் சுரேஷ்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் பேசிய தனலட்சுமி சீனிவாசன் இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சயின்சஸ் அண்ட் ஹாஸ்பிட்டல் டீன் விஸ்வநாதன் "ஒரு குழந்தைக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துகளும் தாய்ப்பாலில் உள்ளது. இதில் அதில் 87% நீர், 7% கார்போஹைட்ரேட், 4% கொழுப்பு மற்றும் 1% புரதம், வைட்டமின்கள் மற்றும் பிற தாதுக்கள் கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், பொட்டாசியம், சோடியம் போன்றவை அடங்கியுள்ளன. பிறந்த சில நாட்களில் ஏற்படும் சுவாச கோளறு, வயிற்றுபோக்கு, நீரழிவு நோய், அதிகபடியான ரத்த சர்க்கரை மற்றும் தீவிர இரப்பை மற்றும் குடல் பிரச்சனை போன்ற குறுகிய மற்றும் நீண்ட நாள் நோய்களிடமிருந்து தாய்ப்பால் பாதுகாக்கிறது. மேலும் பெண்களுக்கு தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் மார்பக புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை புற்று நோயில் இருந்தும் காக்கிறது. உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசர நிதியம் (UNICEF) ஆகியவை முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே சிறந்த உணவு என்றும் குழந்தைக்கு முதல் இரண்டு வருடம் வரை தாய்ப்பாலுடன் கூடிய சத்தான துணை உணவு எடுத்து கொண்டால் குழந்தையின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என்றும், இரண்டு வயது வரை குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கும் போது ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தையின் இறப்பு சதவிதம் குறைகிறது என்று கூறினார். மேலும் பேசிய அவர் தாய்ப்பால் பற்றிய விழிப்புணர்வை தாய்மார்களிடம் எடுத்து செல்வதில் உங்களை போன்ற செவிலியர்கள் மற்றும் துணை மருத்துவகல்லூரி மாணவர்களாகிய உங்களின் பங்கு மிக முக்கியமானது என்று கூறினார். தாய்ப்பால் வார விழிப்புணர்வு நிகழ்ச்சியை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு ரங்கோலி, ஊமை நாடகம், வில்லுபாட்டு மற்றும் வினாடி வினா போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் தனலட்சுமி சீனிவாசன் இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சயின்சஸ் அண்ட் ஹாஸ்பிட்டல் மெடிக்கல் சூப்பிரண்டு டாக்டர் சுரேஷ்குமார் சிறப்புரையாற்றினார். மேலும் தனலட்சுமி சீனிவாசன் காலேஜ் ஆப் நர்சிங் கல்லூரி முதல்வர் திருமதி தனலட்சுமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். சீனிவாசன் நர்சிங் கல்லூரி முதல்வர் தனலட்சுமி நன்றியுரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் தனலட்சுமி சீனிவாசன் காலேஜ் ஆப் நர்சிங், சீனிவாசன் நர்சிங் கல்லூரி மற்றும் சீனிவாசன் துணை மருத்துவ மாணவர்கள் சுமார் 500 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**Dhanalakshmi Srinivasan University, Perambalur**

**World Breast feeding Week - Awareness Program**

The World Breastfeeding Week programme organized by Dhanalakshmi Srinivasan Institute of Medical Sciences and Hospital of Perambalur, Dhanalakshmi Srinivasan University was held on Monday, August 7, 2023.

Dhanalakshmi Srinivasan Institute of Medical Sciences and Hospital, Dean Dr. Viswanathan, and Medical Superintendent Dr. Suresh Kumar were the special guests on this occasion. Speaking on the occasion, Dhanalakshmi Srinivasan, Institute of Medical Sciences and Hospital Dean, said, "Breast milk contains all the nutrients a baby needs. It contains 87% water, 7% carbohydrates, 4% fat, 1% protein, vitamins, and other minerals like calcium, phosphorus, magnesium, potassium, sodium, etc. Breastfeeding protects against short- and long-term illnesses such as respiratory distress, diarrhoea, diabetes, high blood sugar, and severe colic and intestinal problems that occur within days of birth. Breastfeeding also protects women from breast cancer and cervical cancer. The World Health Organization (WHO) and the United Nations International Children's Emergency Fund (UNICEF) recommend that only breast milk is the best food for the first six months, and that a nutritious complementary diet with breast milk for the first two years will boost the child's immunity, and that the child will continue to breastfeed until the age of two. He said that the mortality rate of children under five years of age is decreasing. Speaking further, he said that the role of nurses and paramedical students like you is very important in bringing awareness about breastfeeding to mothers. Rangoli, Role play, archery, and quiz competitions were conducted for the students of the Nursing and Allied Health Science College on the occasion of the Breastfeeding Week awareness programme, and prizes and certificates were given to the winning students. Dhanalakshmi Srinivasan Institute of Medical Sciences and Hospital Medical Superintendent Dr. Suresh Kumar delivered the keynote speech on this occasion. Also, Mrs. Dhanalakshmi, Principal of Dhanalakshmi Srinivasan College of Nursing, gave a welcome address. Dhanalakshmi, Principal, Srinivasan Nursing College, delivered the vote of thanks. About 500 students from Dhanalakshmi Srinivasan College of Nursing, Srinivasan Nursing College, and Srinivasan Institute of Medical Sciences students participated in the event.